MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

# பழந்தமிழரின் ஒழுக்கமுறைகளும் - மணச்சடங்குகளும் (சங்கஇலக்கியத்தை முன்வைத்து)

முனைவர். கு. செல்வாஈஸ்வரி,
தமிழ்த்துறை,உதவிப்பேராசிரியர்,
எஸ். எ..ப். ஆர். மகளிர் கல்லூரி,
சிவகாசி. Selvaanand2008@gmail.com
DOI 10.5281/zenodo.17071011.

**Abstract :**

They say that love has no eyes. The custom of speaking falsely and acting falsely is prevalent today. It is rare to find a heart that only desires love among men who are used to lust. In the Sangam era, on the basis of one man for one woman, they lived with unchanging love, united in their hearts. The inner connection filled with love is what can explain the excellence of the Kalavoggam. Even if a couple meets many times, they remain united and inseparable with a close heart.

**Key Words :** Sangam Literature - Ethics - Marriage - Kalavu - Karppu

## முன்னுரை

சுட்டிஒருவர் பெயர்கொள்ளப்பெறாமல் அன்போடு இணைந்து ஐந்திணை அடிப்படையில் ஒழுக்கங்கள் பிரித்தறியும் முறையினை சங்கப்பாக்கள் வழி அறிகி ன்றோம். தமிழகத்துக் கூறப்படும் எண்வகை மணங்களும் களவிற்கு அடித்தளமாக அமைகின்றது . பருவம் நிறைந்த ஆண்பெண் இருவரும் ஊழ்நிலையில் ஒன்றுபடுகின்றனர் . அப்போது வேறு எதையும் அறியாது காதல்வயம் அடையும் தமிழர்தம் மரபினை,

**“ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றிஉயர்ந்த பாலது ஆணையின**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப...”** [1]

என்ற நூற்பா வழி அறியலாம் . ஒத்த அன்புள்ளம் கொண்ட உள்ளப்புணர்ச்சி மணந்து கொண்ட பின்னரே மெய்யுறு புணர்ச்சியாக துவங்கும் என்று தொல்காப்பியர் பகர்கின்றார் . இக்கட்டுரையில் ஒருவனுக்கு ஒருத்தியாக வாழும் பண்பாட்டுமுறை சார்ந்த ஒழுக்கத்தினையும் மணச்சடங்குமுறைகளையும் (அகப்பாடல்கள்வழி) அறிவோமா!

## நெஞ்சம் ஒருமித்தல்

பொதுவாக, காதலிற்கு கண்ணில்லை என்பர். போலியாய் பேசி பொய்யாக நடிக்கும் வழக்கம் தற்போது நிலவி வருகின்றது . ஆசைக்குப் பழகும் ஆண்கள் மத்தியில் அன்பை மட்டுமே எதிர்பார்க்கும் உள்ளத்தைக் காண்பது அரிதாகும் . சங்ககாலத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற அடிப்படையில் அகம் முழுவதும் ஒன்றிணைந்து மாறாத காதலோடு வாழ்ந்தனர். அன்பினால் கூடிய உள்ளப்புணர்ச்சியே களவொழுக்கத்தின் சிறப்பினை எடுத்துரைக்க வல்லதாகும். இருமணம் பலமுறை


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

சந்தித்தாலும் எவ்வித உறவும் இல்லாது நெருங்கிய நெஞ்சமோடு ஒருமித்து பிரியாது காணப்படும் தன்மையினை குறுந்தொகையில் காணலாம்.

**"யாயும் ஞாயும் யாரா கியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழியறிதும்**
**செம்புலப் பெயனீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே." (குறுந்: 40)**

இப்பாடல் வழி தலைவன் தலைவி தன்னுடன் பேச பலவாறாக காதல் மொழிகளை எடுத்துரைப்பது தன்மையினை அறியலாம் . ஈண்டு, அன்புடைய நெஞ்சம் திருமணத்தில் இணைய கணவனும் மனைவியும் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டு அடுத்த கண்ட இல்லற வாழ்வை நாடும்படி தமிழர் மணமுறை வகுக்கப்படுகின்றது.

**பொய்யும் வழுவும் தண்டனையாதல்**

சங்ககாலத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற வரையறை இருந்தமைக்குக் காரணம் காதலர் வாழ்வில் கற்புநெறிபட வாழ வேண்டும் என்பதுதான். ஒழுக்கநெறித் தவறிவாழ்வோர் குலமரபினராக இருந்தாலும் அவர்களுக்குக் கொடுந்தண்டனை வழங்குவதற்குக்கூட அன்றைய சமூகம் தயங்குவதில்லை.

சான்றாக, பழந்தமிழர்கள் ஒருவர் செய்த தவறினை செய்யாமல் மறைப்போரைக் குற்றவாளியாகக் கருதி அவர்களுக்கும் தண்டனை வழங்கி உள்ளனர். காதலுக்கு எவ்வளவு சுதந்திரம் கொடுத்துள்ளார்களோ அதே போன்று ஒழுக்கத்துக்கு இழுக்கு ஏற்பட்டால் அதனைக் கண்டு வெகுண்டு சீறும்பண்பு அக்கால அகஒழுக்கநெறியினை எடுத்தியம்புகின்றது . இச்செய்தியினை உணர்த்தும் பாடல்,

**".......பெரும் பெயர்க் கள்ளூர்**
**திருநுதற் குறுமகள் அணி நலம் வவ்விய**
**அறனிலாளன் அறியேன் என்ற**
**திறன் இல் வெஞ் சூள் அறி கரி கடாஅய்**
**முறி ஆர் பெருங் கிளை செறியப் பற்றி**
**நீறு தலைப்பெய்த ஞான்றை........" (அகம்: 256)**

மேற்கண்ட பாடல் வழி கள்ளூர் என்னும் ஊரில் வாழ்ந்த சிறுமியை ஒருவன் தன் வலிமையால் பெண்மையைக் கவர்ந்து கொண்டான் . அவளை ஊரார் முன்னிலையில் எனக்கு த் தெரியாது என்று கூறி சூளுரைத்தான். பின்னர் ஊரார் அவன் செய்த குற்றத்தைக் கண்டறிந்து கொதிக்கும் சுண்ணாம்பு நீற்றை அவன் தலையில் கொட்டி தண்டனை வழங்கினர் . இங்ஙனம் அன்றைக்கே பெண்ணின் கற்பினைச் சூறையாடிய நபருக்குத் தக்க தண்டனைகள் வழங்கும் சட்டவியல் அணுகுமுறை நம் மை வியக்கவைக்கின்றது. தவறிழைத்தோர் யாராக இருந்தாலும் ஊர்க்கூடி ஒன்றிணைந்து தண்டனைகள்


http://Creativecommons.org//license/by/4.0/.

வழங்குவது அன்றைய சமூகத்தின் ஒழுக்கநெறியைப் பறைசாற்றுகின்றது எனலாம் . அகஇலக்கியத்தின் மதிப்பு குறையாமல் இருக்க பாடுபடும் முன்னோரின் அறப்பண்பு பாராட்டுதலுக்கு உரியதாகும்.

**மணச்சடங்குகள்**

திருமணம் நிகழ்த்தும் விதமாக முதலில் பெண்பார்க்கும் படலம் அமைவதுண்டு . பருவம் வயது அடைந்த உடனே இயல்பாகப் பெற்றோர்கள் திருமணம் பேசமுற்படுவர் . பெரியோர்கள் முன்னிலையில் சமுதாய நெறிப்படி கற்பைக் காத்துக் கொள்ள நொதுமலர் வரைவு நிகழ்கின்றது . இத்தகு மரபா னது வெளிப்பட வரைதலும் வெளிப்பட வரையாமையும் என்பர் இலக்கண நூலார் . களவு அறியாத பெற்றோர்கள் தனது மகளுக்குத் திருமணம் செய்ய ஏற்பாடு நிகழ்த்துவது இதைக் கண்டு தலைவியும் தோழியும் அஞ்சுவது களவிற்குரிய இலக்கணமாகும் . திருமணச் சடங்குமுறைகள் பற்றி அறிஞர் கருத்தாக , **'வரலாற்றுக்கு முற்பட்ட மாந்தர் பயிர்ச்செழிப்புக்குச் சடங்குகள் செய்வதைப்போல தம் இனச்செழிப்பை விரும்பிச் செய்வதே மணச்சடங்காகும்."**[2]
என்பர்.

தலைவியின் இல்லம்நாடி பெண்கேட்டு வரும் வழக்கத்தை சங்கப்பாக்கள் பதிவுசெய்துள்ளன . தலைவனும் வேற்றாரும் தலைவியைப் பெண்கேட்கும் வழக்கங்களை நிறைய பாடல்களில் காணமுடிகின்றது. அகஇலக்கியத்தில், தலைவியைப் பெண்பார்க்க வரும் உறவினரை பெற்றோர்கள் உவகையுடன் வரவேற்று உபசரிக்கும் காட்சி இதோ,

**“.......நம்மூர்ப்**
**பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ**
**தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதலவர்**
**நன்றுநன் றென்று மாக்களோடு**
**நின்று பெரிதென்னும்.............” (குறுந்: 146)**

**“எந்தையும் யாயும் உணரக்காட்டி**
**ஒளித்த செய்தி வெளிப்படக் கிளந்தபின்**
**மலைகெழு வெற்பன் தலைவந் திரப்ப**
**நன்றுபுரி கொள்கையின் ஒன்றா கின்றே...**
**நீடிரும் பெண்ணைத் தொடுத்த**
**கூடினும் மயங்கிய மைய லூரே.” (குறுந்: 374)**

**“மென் தோட் கிழவனும் வந்தனன் நுந்தையும்**
**மன்றல் வேங்கைக் கீழ் இருந்து**
**மணம் நயந்தனன் அம் மலைகிழவோற்கே”(கலி: 41)**


http://Creativecommons.org//license/by/4.0/.

MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

மேற்கண்ட பாடல்வழி தலைவி மனதார விரும்பிய தலைவனது உறவினர் வீட்டிற்கு நரைமுடித்த பெண்களோடு வருகை புரிகின் றனர். ஆகவே இனித் திருமணத்திற்குத் தடை எதுவும் அமையாது எனத் தோழி தலைவிக்கு ஆறுதல் மொழிகின்றாள். இதன்வழி தலைவியின் பெற்றோர் பெருமைப்பட மகிழ்வதால் இருதரப்பினருக்கும் சம்மதம் கொண்டு மணமுறை நிகழ்த்தியமை தெளிவாகின்றது . மேலும் களவுவெளிப்படாமலே மணம்செய்து கொள்ளும் காட்சி அகப்பெண்டீரின் மரபாகக் காணப்படுகின்றது. பெற்றோர்கள் தலைவியின் களவுஅறிந்தும் களவு அறியாமலும் திருமணத்திற்கு சம்மதம் தெரிவிப்பதால் இருவழக்கம் மணமுறையில் அறியமுடிகின்றது . இத்தகு அகமணமுறை திருமணங்களால் சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற சிந்தனை ஒருமைப்பாட்டிற்கு வழிகோலுகின்றது.

**தாலி**

இல்லறத்தின் தத்துவங்களைப் புரியவைப்பதுவே திருமணச்சடங்கின் முக்கிய நோக்கமாகும் . தலைவியை மணமகன் வீட்டார் கையில் முழுசம்மதத் ;துடன் கொடுக்கும் மணச்சடங்குமுறைமையினை அகப்பாடலில் காணமுடிகின்றது . இங்ஙனம் குடும்பமுறைகளைப் பாரம்பரியமாகப் பறைசாற்றி உள்ளணர் பழந்தமிழர்கள் எனலாம் . அன்று மணவிழா அன்று மங்கல ஒலி இசைக்க திருமணம் நடைபெற்றுள்ளது . ஈன்ற மங்கல மகளிர் நால்வர் மணமகளை வாழ்த்தி நீராடியுள்ளனர். பெண்ணிற்குத் தாலி கட்டும் வழக்கம் இடம்பெறவில்லை என்றாலும் தமிழர் திருமணமுறைக்கு நற்சான்றாக மங்கலநாண் பூட்டியதாக அறிஞர்கள் கருத்து தெரிவிப்பர். இதனை,

**'திருமணத்தின் பொழுது மணமக்களுக்குத் தாலி கட்டும் வழக்கம் இருந்திருக்குமாயின் இரு பாடல்களில் அகம் 86,136 ஒன்றிலேனும் நீராட்டு விருந்து முதலியவற்றைக் கூறும் புலவர் தாலி கட்டும் சடங்கினைக் குறிக்காமல் இருந்திருப்பாரோ என்ற ஐயம் எழுகிறது."[3]**

என்பர் இராசமாணிக்கனார் . பழங்காலத்தில் மங்கலப்பெண்டிர் மங்கல நாணாக இழை அணியைப் பயன்படுத்திய குறிப்பு,

**'ஈகை அரிய இழை அணி மகளிரொடு ." (புறம்: 127)**

என்ற புறப்பாடல் வழி அறியமுடிகின்றது . இருவீட்டாரும் இணைந்து வாழ முதுபெண்டிர் ஆசி வழங்கும் தன்மை சில பாடல்களில் காணமுடிகின்றது.

திருமணநிகழ்வினை விருந்தோடு சிறப்பித்தமைக்கு நற்சான்றாக,

**"உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை**
**பெருஞ்சோற்று அமலை நிற்ப நிரை கால்**
**தண் பெரும் பந்தர்த் தரு மணல் ஞெமிரி..........**
**கற்பினின் வழாஅ நற் பல உதவிப்**
**பெற்றோற் பெட்கும் பிணையை ஆக என**
**நீரொடு சொரிந்தஈர் இதழ் அலரி........**


http://Creativecommons.org//license/by/4.0/.

**வதுவை நல் மணம் கழிந்த பின்றை.....” (அகம்: 86)**

இதன் வழி திருமணமுறை ஒரு நல்ல நாளில் திங்களும் உரோகிணியும் கூடிய நல்லநாளில் நிகழ்ந்ததுள்ளது. இதுவே கற்பின் தொடக்கமாக ஏற் கலாம். இப்பாடலில் மணவிழாவிற்கு வருகை புரிந்தவர்கட்கு உழுந்தம் பருப்புடன் கலந்த அரிசிப்பொங்கல் இடையறாது வழங்கப்பெற்றது . இறைச்சியும், நெய்யும் கூட்டிய வெண்சோற்றினை படைக்கும் தன்மையினைத் தமிழரிடம் அறியமுடிகின்றது. குற்றம் இல்லாதபடி வள்ளன்மையுடன் சுற்றத்தாருக் கும் சான்றோர்களுக்கும் உண்ணக் கொடுத்து உபசரிக்கும் விருந்தோம்பல் போற்றுதலுக்குரியது . இதன்வழி நமது முன்னோரின் நாகரிகச் சிறப்பினையும் பகுத்தறிவையும் எண்ணி பெருமிதம் அடையக்கூடும்.

இன்னும் நல்லநாளில் மணமேடையை அழகுப்படுத்தி கடவுளை வழிபட்டு பணைமுரசு ஒலிக்க மண ஞ்செய்துள்ளனர். இதன்வழி தலைவியின் பெற்றோர் தலைவனுக்கு முழுமனதுடன் தலைவியை வதுவைச்சடங்கு செய்துகொடுக்கும் காட்சி இதோ,

**“மைப்பு அறப் புழுக்கின் நெய்க்கனி வெண் சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி..........
படு மண முழவொடு பரூஉப் பணை இமிழ
வதுவை மண்ணிய மகளிர்...................
மென்பூ வாகை புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த பயம்புஅமல் அறுகைத்
தழங்குகுரல் வானின் தலைப்பெயற்கு.......
தண்நறு முகையொடு வெண்நூல் சூட்டி........
தமர் நமக்கு ஈத்த தலைநாள் இரவின்......” ( அகம்: 136)**

எனலாம். இங்கு மங்கல நாண் இசைக்க திருமணச்சடங்கு நடைபெற்றமை கண்டு மூத்தவர்கள் மகிழ்வுடன் சென்றுள்ளனர் . மணப்பெண்ணிற்கு அறுகின் அரும்பு சேர்த்த வெண்காப்பு நூலை அணிவிக்கும் காட்சி இப்பாடலின் சிறப்பம்சமாகும் . கற்புநெறிப்படி தமிழர் திருமணம் நடைபெற்றமைக்கு இதுவே நற்சான்றாகும். இது பற்றி அறிஞர் கூறுகையில்,

**'நீருடன் நெல்லும் சேர்ந்து முளைவிடுதல் போல மணமகளும் பிள்ளைப்பேறு அடைவாள் என ஒத்த மந்திரமாக நெல்லும் பூவும் தூவப்பட்டன."[4]**

என்பர் கா . சுப்பிரமணியன். இக்கூற்றுப்படி இனவிருத்தி அடைய பயிர்செழிக்கும் தன்மையோடு தொடர்புப்படுத்துவது அக்கால சமூக மரபினை எடுத்தியம்புகிறது.

**சிலம்புகழி நோன்பு**

திருமணம் நிச்சயிக்கப்பட்ட பின்னர் திருமணத்திற்கு முன்பாக அணிந்துள்ள சிலம்பை மணமகளின் காலிலிருந்து அகற்றும் விழாவே சிலம்புகழிநோன்பு என்பர் . அந்நாளில் சமுதாய மரபாக இச்சடங்கு நடைபெறுள்ளது . மணமகள் இல்லத்தில் வைத்து பெண்ணி ன் காலில் முன்னர்


http://Creativecommons.org//license/by/4.0/.

அணிந்துள்ள சிலம்பினை அகற்றுவர் . தன் மகள் மணம் ஆகும் வரை கற்புடைய பெண்ணாக இருப்பதை ஊராருக்குத் தெரிவிக்க இச்சடங்கு நடைபெற்றிருக்கலாம். இக்கருத்தினை,

**"நல்கூர் பெண்டின் புல்வேய் குரம்பை.........**
**ஏதில் வறுமனைச் சிலம்புடன் கழீஇ**
**மேயினள் கொல்லென நோவல் யானே."** (அகம்: 369)
**"நும் மனைச் சிலம்பு கழீஇ அயரினும்**
**எம் மனை வதுவை நல் மணம் கழிக........."** (ஐங்: 399)

என்ற பாடல்கள் வழி நிறுவுகின்றன. இங்கு மணம் புரிந்து மறுவீடு போகுமுன்னர் தலைவி அணிந்த சிலம்பை கழித்துவிடுவதால் இதனை சிலம்பு கழிதல் என்று சங்கஇலக்கியம் ஒரு சடங்காகச் செய்துள்ளது. தலைவி காலில் சிலம்பு கழறாமல் இருந்தால் இன்னும் திருமணம் நடைபெறவில்லை என்பதை **"வில்லோன் காலன் கழலே தொடியோள் மெல் அடி மேலவும் சிலம்பே..."** என்று குறுந்தொகையில் பதினெழாம் பாடல் பதிவுசெய்துள்ளனர்.

மற்றொரு பாடலில் தலைவனின் தாய் தனது மகளுக்கு சிலம்பு கழிவதைக் கண்டு பெற்றோர் வருந்தும் பாடல் இதோ,

**".....சிலம்பு கழீஇய செல்வம்**
**பிறருழைக் கழிந்த என் ஆயிழை அடியே"** (நற்: 279)
**"..........துவர் வாய்ச்**
**சிறு வன்கண்ணி சிலம்பு கழீஇ**
**அறியாத் தேஎத்தள் ஆகுதல் கொடிதே"** (அகம்: 385)

என்று பாடுகிறார் . தலைவியின் தாய் தன்னால் நிகழவிருக்கும் சடங்குமுறை தனக்குக் கிட்டவில்லை என்று ஏக்கத்துடன் வருந்துகிறாள்.

**இல்லற மாண்பு**

ஆண் பெண் இருவரும் உடலாலும் உணர்வாலும் ஒன்றிணைந்து வாழும் முறையே இல்லறமாகும். இல்வாழ்வில் அன்பும் அறமும் இரண்டற கலத்தல் வேண்டும் . கற்புள்ளம் கொண்ட தலைவியோடு சுற்றம் புகழ அறநெறிப்படி வாழும் நெறியே இல்லறமாம் . அன்றைய காலத்தில் இல்லற மாண்பிலிருந்து தம்பதியர்கள் பிரிந்து விழுமியதாகச் சான்றுகள் இல்லை . தலைவி மணமான உடன் இல்வாழ்க்கைக்குரிய ஏற்ற மனைவியாக மகிழ்வோடு தலைவனுடன் செல்கிறான் . சென்றவுடன் உறவினருக்கு அன்போடு விருந்தோம்பும் சிறப்பினை குறுந்தொகையில் காணலாம் .

**"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கம் கழாஅ துடீஇக்**
**குவளை யுண்கண் குய்புகை கமழத்**
**தான் துழந் தட்ட தீம்புளிப் பாகர்**


http://Creativecommons.org//license/by/4.0/.

**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே”(குறுந்: 167)**

இங்கு திருமணம் முடித்தபிறகு கணவனும் மனைவியும் நடத்தும் தனிக்குடித்தனம் கண்டு செவிலித்தாய் இன்புறும் காட்சியினைக் காணமுடிகின்றது . தலைவி முதன்முதலாக சமைத்த உணவினைக் கண்டு கணவன் இனிது என்று விரும்பி உண்டதால் தலைவியின் உள்ளம் மகிழ்வடைகின்றது. இன்றைய காலத்தில் பெண்வீட்டார் தனது மகளின் இனிமையான இல்லறமாண்பினைக் கண்டு வியப்பது போற்றும் தன்மை அன் றைக்கும் இருந்துள்ளது. இவ்வாறாக பெண்கள் திருமணம் ஆன உடன் பண்பாட்டு மரபோடு அறநெறி வழுவாமல் வாழும் திறன் நம்மை வியக்கவைக்கின்றது எனலாம். இல்லறம் அரியாத பேதை சமைக்கும் அழகினைக் கண்டு கணவன் போற்றுவது சிறப்பாகும்.

மற்றொரு பாடலில் , விரும்பிய தலைவனுடன் உடன்போக் கு மேற்கொண்ட தலைவி தன் தலைவனுடைய நாட்டின் சிறப்பினைப் புகழாரமாக ஏற்றிக்கூறும் பாங்கினை ஐங்குறுநூறு பதிவுசெய்துள்ளது.

**“அன்னாய் வாழி வேண்டு அன்னை நம் படப்பை**
**தேன் மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு**
**உவலை கூவல் கீழ்**
**மான் உண்டு எஞ்சி கலிழி நீரே” (ஐங்: 203)**

இங்கு அன்னையிடம் தலைவன் நாட்டு வளமானது தனது தோட்டத்திலுள்ள தேனைக் கலந்த பாலைக்காட்டிலும் இனிமையானது என்கிறாள் தலைவி . இலைதழைகள் கிடக்கும் கிணற்றின் அடியிலுள்ள விலங்குகள் உண்டு எஞ்சி கலங்கிய நன்னீரே தனக்கு இனிமையானதாக அமைவதாக மிகைப்படுத்தி கூறுகின்றாள். அறமாண்புடைய பெண்ணாக இல்லறத்தின் மகத்துவம் தலைவியின் வறுமையை மறைத்து உரைப்பது சிறப்பாகும்.

**முடிவுரை**

அன்றைய சமூகத்தில் ஆணின் மனஉணர்வு விரும்பிய பெண்ணைத் தவிர்த்து வேறொருவரையும் நாடாமல் இருப்பது உண்மையான அன்பின் அடையாளம் எனலாம் . உண்மையான காதலை ஆக்கவோ அழிக்கவோ மு டியாது என்பது வெளிப்படை . தலைவி பெற்றோர்களுக்காக விரும்பிய தலைவனை விட்டு வேறொரு ஆடவனை திருமணம் செய்ததாக சங்ககாலத்தில் பதிவுசெய்யப்படவில் லை. இல்லாதவருடன் பகுத்துண்டு வாழ வேண்டும் என்ற விருந்தறன் முன்னோரின் அறமேம்பாட்டினை உணரவைக்கின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்: 1039
2. கா . சுப்பிரமணியன், சங்ககாலச் சமுதாயம்., ப. 37
3. மா. இராசமாணிக்கம், தமிழர் திருமணத்தில் தாலி, ப. 13


http://Creativecommons.org//license/by/4.0/.

4. கா. சுப்பிரமணியன், சங்ககாலச் சமுதாயம், ப. 38

**துணைநூற்பட்டியல்**

1. கா . சுப்பிரமணியன், சங்ககாலச் சமுதாயம்., நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - 2011.
2. மா. இராசமாணிக்கம், தமிழர் திருமணத்தில் தாலி., செல்வி பதிப்பகம், காரைக்குடி-1955.



http://Creativecommons.org//license/by/4.0/.